# கல்லா கட்ட ஆரம்பித்துவிட்ட அமைச்சர்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை!

முதல் பக்கத் தொடர்ச்சி

இரண்டு வாரத்துக்கு முன்பு, 2ஆம் தேதி என்ன நடந்தது என்று நீங்கள் எல்லாம் மறந்திருக்க மாட்டீர்கள். இந்த அரசு என்னையும் கைது செய்ய முயற்சி செய்தது. எதற்காகக் கைது? நம் தலைவர் சொன்னதின் பேரில், டெல்டாவில் விவசாயிகளுக்கு ஆதரவாக, தஞ்சாவூரில் ஒரு போராட்டத்தில் கலந்து கொண்டு பேசினேன். கிட்டத்தட்ட 22 நிமிடம் பேசியிருக்கிறேன். நான் கூட பேசினதை வைத்துத்தான் ஏதோ கைது செய்ய வந்திருக்கிறார்கள் என்று நினைத்தேன்.

### டம்மி முதலமைச்சர்

அன்று காலை 8 மணிக்கு காவல்துறை என் வீட்டிற்கு வந்தார்கள். அப்பொழுது, நான் செய்தித் தாள்களை படித்து முடித்துவிட்டு, தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தேன். என்னுடைய உதவியாளர் வந்து சொன்னார், `இந்த மாதிரி தஞ்சாவூரில் இருந்து வந்திருக்கிறார்கள் காவல் துறையினர்'. நான் அப்பொழுதே முடிவு செய்துவிட்டேன்; சரி, கைது செய்ய வந்திருக்கிறார்கள். நான் உடனே யோசித்துப் பார்த்தேன், நேற்று என்னவெல்லாம் பேசினோம்? 'டம்மி முதலமைச்சர்' என்று சொன்னேன். அதை ஒப்புக் கொண்டார்கள். அதற்கு எந்த எதிர்வினையும் இல்லை. கேடுகெட்ட அரசு அமைந்திருக்கிறது, ஒரு வெட்கங்கெட்ட அரசு அமைந்திருக்கிறது என்று இதெல்லாம் சொன்னேன். இதற்கெல்லாம் எந்த எதிர்வினையுமே இல்லை. இதற்குத்தான் கைது செய்ய வந்திருக்கிறார்கள் என்று நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

என்ன சொன்னேன்? நேற்று என்ன அப்படி பேசிவிட்டேன்? `பொம்மை முதலமைச்சர்', `வெட்கங்கெட்ட அரசு', `கேடுகெட்ட அரசு', எதற்கும் துப்பில்லை, தைரியம் இல்லை, விவசாயிகளை இப்படி நடுரோட்டில் விட்டுவிட்டீர்கள். வேறு எதுவுமே நான் சொல்லவில்லை, 'காவிரியில் தண்ணீர் வர வேண்டும்' என்று சொன்னேன். இது எனக்கு தோன்றவே இல்லை, நானே வெளியே பார்த்தபோது, காவல்துறை அதிகாரிகள் நின்று கொண்டிருந்தார்கள். பிறகு, வீட்டிற்குள்ளேயே வந்துவிட்டார்கள். ``எதற்கு வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டேன். "ஐயா, நேற்று நீங்கள் தஞ்சாவூரில் பேசியிருக்கிறீர்கள்." ``ஆமாம் பேசினேன், அதற்கு என்ன?" என்றேன். ``அது விஷயமாகக் கைது செய்ய வந்திருக்கிறோம்." காலை 8:15 மணி இருக்கும்.

நான் சொன்னேன், ``காத்திருங்கள், இப்பதான் எழுந்திருக்கிறேன். என் வழக்கறிஞர்களுக்கு தகவல் அனுப்ப வேண்டும், தலைவரிடம் சொல்ல வேண்டும். வழக்கறிஞர்கள் வந்தவுடன் நான் வந்து உங்களைச் சந்திக்கிறேன், வெளியே காத்திருங்கள்" என்றேன். ``ஐயா, புரிந்துகொள்ளுங்கள், புரிந்துகொள்ளுங்கள்" என்றார்கள். ``கொஞ்ச நேரம் காத்திருங்கள்" என்று சொல்லிவிட்டு, நான் உள்ளே சென்றுவிட்டேன். அதன் பிறகு நான் முதலாவதாக தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டது நம் வழக்கறிஞர்கள் அணிக்குத்தான். கழக நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் வந்தால்தான் நான் கைதாவேன் என்று சொல்லிவிட்டேன்.

அதேபோல் உடனே நம் வழக்கறிஞர்கள் எல்லாம் ஒரு 9:30 மணி, 9:45 மணிக்கெல்லாம் வந்துவிட்டார்கள். தலைவர் அவர்கள் தொலைபேசியில் அழைத்து, ``கைதாகாதே, 10:30 மணி வரைக்கும் காத்திருக்க வை. கொஞ்ச நேரம் அவர்களிடம் பேசு, உட்கார வை" என்றார். நான் சொன்னேன், ``வழக்கறிஞர்கள் எல்லாம் வந்துவிட்டார்கள். இதில் கைது செய்வதற்கு ஒன்றும் கிடையாது, நான் அப்படியொன்றும் பேசவில்லை. என்ன நடக்கிறதோ பார்த்துக்கொள்ளலாம்" என்று சொல்லிவிட்டேன். தலைவர் சொன்னார், ``என்.ஆர்.இளங்கோவும், வில்சன் அவர்களும் வருவார்கள். அவர்களிடம் பேசிவிட்டு அதன் பிறகு என்ன முடிவு என்றாலும் எடுத்துக் கொள்" என்றார். ``நான் இதற்கெல்லாம் பயப்படப் போவதில்லை, கைது செய்யட்டும்" என்று நான் சொல்லிவிட்டேன்.

மின்னல் வேகத்தில், சென்னை உயர்நீதிமன்றத்தில் நம் வழக்கறிஞர்களாகிய நீங்கள், அந்தச் சட்டப் போராட்டத்தை உடனடியாக ஆரம்பித்தீர்கள். அப்பொழுதுகூட கைதாகி வண்டியில் ஏறும் பொழுது பத்திரிகையாளர்கள் எல்லாம் கேட்டார்கள், ``இந்தக் கைதை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?" அவர்கள் நினைத்துக் கொண்டார்கள், `இது பழிவாங்கும் போக்கு, நான் சும்மா விடமாட்டேன்' என்றெல்லாம் பேசுவேன் என்று எதிர்பார்த்தார்கள். நான் சிரித்துக் கொண்டே சொன்னேன், ``இது மிகப்பெரிய ஒரு காமெடி. மிகப்பெரிய நகைச்சுவையையே இந்த அரசு நடத்தியிருக்கிறது."

இல்லை, ஐந்தாம் தேதி சட்டமன்றம் கூடப்போகிறது. நீங்கள் பேசுவதற்கு வருவதைத் தடுப்பதற்கு முயற்சி செய்கிறார்களா? என்றார்கள். நான் சொன்னேன், அந்த அளவுக்கு இவர்களுக்கெல்லாம் மூளை கிடையாது. அப்படியே நாங்கள் கேள்விக் கேட்டாலும், அங்கே அவர்கள் அப்படியே பதில் சொல்லி கிழித்துவிட்டார்கள்.

### யார் அமைச்சர்? - தெரியாது

யார் அமைச்சர் என்றே யாருக்குமே தெரியாது. யார் சட்டமன்ற உறுப்பினர் என்று இப்போது வரைக்கும் யாருக்குமே தெரியாது. ஏனென்றால், வேறு ஒரு துறைக்கு நாம் பதில் கேட்டால், வேறு ஒரு துறை அமைச்சர் பதில் சொல்கிறார்.

ஒரு படத்தில் கூட வருமே, நாம் ஒரு கேள்வி கேட்டால், நாமே ஆச்சரியப்படும் அளவுக்கு ஒரு பதில் சொல்வான் பாருங்கள், அதைப்போன்ற ஒரு நிலைமைதான். எங்களுக்கு மட்டும் இல்லை, இப்போது அங்கு உட்கார்ந்திருக்கிறாரே ஒரு டம்மி முதலமைச்சர், அவருக்கும் யார் அமைச்சர் என்று தெரியாது. அவருக்கும் யார் சட்டமன்ற உறுப்பினர் என்று தெரியாது. அப்படித்தான் இந்த சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு தொலைக்காட்சியில் நீங்கள் அத்தனை பேரும் நேரலையில் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள்.

பொதுவாக மற்ற இயக்கங்கள் எல்லாம் ஒரு கைது விஷயம் என்றால், ரொம்ப தீவிரமாகி விடுவார்கள். ஆனால், `மிசா', `எமர்ஜென்சி' இதையெல்லாம் பார்த்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் கலைஞருடைய உடன்பிறப்புகள் இதற்கெல்லாம் நாம் பயப்பட மாட்டோம்.

கைது என்பதையெல்லாம் ரொம்ப ஒரு சாதாரண விஷயமாக நாம் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டோம். அதே மாதிரி சொல்லி அடிப்பது போல தஞ்சாவூர் செல்வதற்குள் என் கைது நடவடிக்கையை நீதிமன்றம் மூலமாக ரத்து செய்ய வைத்ததும் நீங்கள்தான்.

### நம் உடன்பிறப்புகள்

ரொம்ப முக்கியமாக ஆளுங்கட்சியே நீதிமன்றத்தில் சென்று சொன்னார்கள், "எதிர்க்கட்சித் தலைவரைக் கைது செய்யும் எண்ணம் எல்லாம் எங்களுக்கு இல்லை. விசாரித்துவிட்டு விட்டுவிடுவோம்". நான் சொன்னேன், ``ஏங்க நேற்று இரவுதான் தஞ்சாவூரில் இருந்து வந்தேன், சொல்லி இருந்தால், நான் அங்கேயே தங்கியிருப்பேன். இன்றைக்கு எனக்கு இரண்டு கூட்டங்கள் வேறு இருக்கின்றன அதையும் இங்கே எடுத்துவிட்டீர்கள்." போகும்போது நானும், அண்ணன் சேகர்பாபு, சரவணன், ஒரு ஜாலியாகப் ட்ரிப் போவது போலத்தான் போனோம். அண்ணன் மா.சு அவர்கள், கிட்டத்தட்ட ஏழு எட்டு பேர், ஜாலியாக பேசிக்கொண்டு, அப்போது அவர்களிடம் சொன்னேன், இந்த மாதிரி மக்கள் வரிப்பணத்தில் ஒரு ரோட் ஷோ. அதுவும் செல்லும் வழியெல்லாம் நம் உடன்பிறப்புகள் ஆங்காங்கே எங்களின் வழியை மறித்து, சரியாக என்னென்ன கொடுக்க வேண்டுமோ கொடுத்துக் கொண்டிருந்தார்கள். காபி, டீ, ஜூஸ் எல்லாம், எங்களுக்கு மட்டுமல்ல, அங்கு இருந்த காவல்துறை அதிகாரிகளுக்கும் சேர்த்துதான் கொடுத்து கொண்டிருந்தார்கள்..

எந்தச் செலவுமே இல்லாமல் மக்கள் வரிப்பணத்தில் இப்படி ஒரு ரோட் ஷோ நடத்துவதற்கு, இந்த அரசு நமக்கு உதவி இருக்கிறது. இந்த அரசுக்கு நாம் நன்றியைச் சொல்ல வேண்டும்.

தேர்தலுக்குப் பிறகு கொஞ்சம் சோர்ந்து போய் இருந்த நம் உடன்பிறப்புகள், இந்த டம்மி அரசு, டம்மி ஆட்சியாளர்கள் அவர்களின் செலவால், அவர்கள் செய்த வேலையால் மறுபடியும் பழைய நிலைக்கு உடன் பிறப்புகளாக நாம் இன்றைக்குத் திரும்பியிருக்கிறோம்.

இதெல்லாம் நான் என் பெருமைக்காகச் சொல்லவில்லை, வழக்கறிஞர் அணியின் பெருமையாகத்தான் இவை அத்தனையையும் இங்கே நான் பதிய வைக்க விரும்புகிறேன்.

நாளைக்கு சட்டமன்றத்தில் என்னென்ன கூத்தடிக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. இந்த 100 நாட்களில், என்னை மட்டும் கைது செய்யவில்லை. முன்னாள் அமைச்சர், அண்ணன் திரு அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் கைது செய்யப்பட்டு, உடனே விடுவிக்கப்பட்டார். நம் சட்டமன்ற உறுப்பினர், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு மார்க்கண்டேயன் அவர்களையும் இதே மாதிரி கைது செய்து மிரட்டிப் பார்த்தார்கள்.

### பெருமை உங்களுக்குத்தான்

சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் இல்லை, இப்போது துடிப்பாக வந்திருக்கக்கூடிய நம் GENZ இளைஞர்கள், இந்த தேர்தல் தோல்விக்கு பிறகு யாரை எழுப்பி விட்டு இருக்கிறார்களோ இல்லையோ, நம் புதிய தலைமுறையினரை எழுப்பி விட்டு இருக்கிறார்கள். இந்தத் தோல்வி மூலமாக நாம் எழுப்பி விட்டு இருக்கின்றோம்; நாம் இல்லை, இன்றைக்கு ஆட்சி அதிகாரத்தில் இருக்கக்கூடிய ஆளும் அரசு.

GENZ இளைஞர்கள், சகோதரர் அன்பானந்தம், சகோதரர் வினோத் சூரியகுமார், சகோதரர் சரண் இவர்களை எல்லாம் குறி வைத்து கைது செய்தார்கள்.

அதுமட்டுமில்லாமல், நான் தஞ்சாவூர் ஆர்ப்பாட்டத்துக்குச் சென்றுவிட்டு வந்த பிறகு, அங்கு யார் யாரெல்லாம் போராட்டம் செய்தார்களோ, அவர்கள் மீதெல்லாம் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். சிலரைக் கைதும் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் எல்லாரும் சட்டப் போராட்டம் நடத்தி, சிறையிலிருந்து அவர்களை எல்லாம் மீட்டது யார் என்று பார்த்தீர்கள் என்றால், இங்கே வந்திருக்கக்கூடிய வழக்கறிஞர்களாகிய நீங்கள்தான் அதற்குக் காரணம். அந்தப் பெருமை உங்களுக்குத்தான்.

இந்த சோஃபா மாடல் அரசுக்கு, நம் கழகத்தைப் பற்றியோ, கழகத்தின் வரலாற்றைப் பற்றியோ, இந்த சட்டத்துறையின் வரலாற்றைப் பற்றியோ அவர்களுக்கு இன்னும் முழுமையாகத் தெரியவில்லை. கடந்த காலங்களில், முத்தமிழறிஞர் கலைஞரின் கைதாக இருக்கட்டும், நம் கழகத் தலைவருடைய கைதாக இருக்கட்டும், இப்படி கழகத்துக்கு எப்பொழுதெல்லாம் நெருக்கடி வந்ததோ, அப்பொழுதெல்லாம் அதை உடைத்துத் தூள் தூளாக்கியது நம் சட்டத்துறைதான்.

ஆட்சி அதிகாரத்தில் இருக்கும்போது யார் வேண்டுமானாலும் யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம். ஆனால், அதிகாரத்தில் இல்லாதபோது, இன்னும் சொல்லப்போனால் எதிர்க்கட்சியாகக் கூட இல்லாதபோது, ஆட்சி அதிகாரத்திலேயே இருந்த ஒரு முதலமைச்சரையே ஊழல் வழக்கில் சிறைக்கு அனுப்பிய துறை நம் சட்டத்துறை, தி.மு.கவின் சட்டத்துறை.

இப்படிப்பட்ட பல்வேறு பெருமைகளைக் கொண்ட உங்களுக்கு, இன்றைக்கு வருகின்ற விஷயங்கள், நீங்கள் பார்க்கின்ற நெருக்கடிகள் இதெல்லாம் மிக மிகச் சாதாரணமானதாகத்தான் நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆனால், நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த 100 நாட்கள் விழிப்போடு இருக்கிறோம், இன்னும் கொஞ்சம் விழிப்போடு நாம் இருக்க வேண்டும். இன்றைக்கு தட்டுத் தடுமாறி அதிகாரத்துக்கு வந்திருக்கக்கூடிய இந்த புதிய கோஷ்டியைப் பார்த்தீர்கள் என்றால், சீட்டுக்கட்டில் ஒன்று இரண்டு ஜோக்கர் இருக்கும், இங்கே 52மே ஜோக்கர்தான். நமக்குத்தான் பெயர் தெரியவில்லை, யார் அமைச்சர், யார் சட்டமன்ற உறுப்பினர் என்று.

### உருட்டுக்கட்டை அமைச்சர்

தமிழ்நாட்டு மக்களுக்கு தெரிந்திருக்கிறதா? தெரியவில்லை, யாருக்குமே தெரியவில்லை. அவர்கள் எல்லாம் அடைமொழி வைத்துப் பேசினால்தான் மக்களுக்குப் புரிகிறது.

லாட்டரி விற்கின்ற அமைச்சர் யாரு? பிளாக்ல டிக்கெட் விற்ற அமைச்சர் யாரு? திருட்டு வி.சி.டி விற்ற அமைச்சர் யாரு? உருட்டுக் கட்டை அமைச்சர் யாரு? பவுடர் போடுகின்ற அமைச்சர் யாரு? காக்கி டவுசர் அமைச்சர் யாரு? சங்கி அமைச்சர் யாரு? என இப்படி கிட்டத்தட்ட கலந்துரையாடல் ஆகிவிட்டது. இப்படியெல்லாம் அவர்கள் பெயர் சொல்லிச் சொன்னால் கூட உங்களுக்கெல்லாம் தெரியாது. அவர்களுடைய பட்டப் பெயர் வைத்து கூப்பிட்டால்தான் நமக்கே புரிகிறது. இதுதான் நிலைமை.

நான் நிச்சயமாகச் சொல்கிறேன், மூன்று மாதங்கள்தான் ஆகியிருக்கின்றன, இனி போகப் போக ஒவ்வொரு அமைச்சரும் நிச்சயமாகப் பெரிதாக மாட்டப்போகிறார்கள். அதற்கு வழக்கறிஞர் அணி நீங்கள் தயாராக இருக்க வேண்டும். இன்றைக்கு நாம் தொடர்ந்து `பெயில்' வாங்கிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு அந்தக் கூட்டத்தை, அந்த கும்பலைப் பிணை வாங்குகின்ற நிலைமைக்கு நாம் நம் பணிகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

> **நான் நிச்சயமாகச் சொல்கிறேன், மூன்று மாதங்கள்தான் ஆகியிருக்கின்றன, இனி போகப் போக ஒவ்வொரு அமைச்சரும் நிச்சயமாகப் பெரிதாக மாட்டப்போகிறார்கள். அதற்கு வழக்கறிஞர் அணி நீங்கள் தயாராக இருக்க வேண்டும். இன்றைக்கு நாம் தொடர்ந்து பெயில் வாங்கிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு அந்தக் கூட்டத்தை, அந்த கும்பலைப் பிணை வாங்குகின்ற நிலைமைக்கு நாம் நம் பணிகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.**

இந்த அரசை ஏதோ தூய்மையான அரசு, ஊழலற்ற அரசு, `மாற்றம்' என்று சொல்லிக்கொண்டு வந்தார்கள். கடைசியில் என்ன செய்திருக்கின்றார்கள்? நம் தலைவர் கொண்டு வந்த ஒவ்வொரு திட்டத்தின் பெயரையும் மாற்றியிருக்கிறார்கள், வேறு எந்த மாற்றமும் கிடையாது. எல்லாவற்றின் மீதும் ஸ்டிக்கர் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எப்படி ஆட்சிக்கு வந்தார்கள் என்பதை நாம் அத்தனை பேரும் பார்த்தோம். இவர்களிடம் மெஜாரிட்டி இருக்கிறதா? கிடையாது.

தி.மு.க சட்டமன்ற உறுப்பினரைப் பார்த்தால் வழக்கு போடு. அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினரைப் பார்த்தால் சோஃபா செட் அனுப்பி, எப்படியாவது பர்சேஸ் செய், அவர்களை ராஜினாமா செய்ய வை. இதைத்தான் இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. இதை தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தில் மிகப் பெரிய ஒரு ஊழல் நடந்திருக்கிறது. இதைச் சொன்னது யார்? நாம் இல்லை. ஆளுங்கட்சியின் வழக்கறிஞரே புகார் கொடுத்திருக்கிறார்கள். நீதிமன்றத்தில் வழக்குப் போட்டிருக்கிறார்கள். மாற்றம், தூய்மை என்று இன்றைக்கு எதையோ சொல்லி உருட்டிவிட்டு வந்தார்கள். ஆனால், இன்றைக்கு கல்லா கட்ட ஆரம்பித்துவிட்டார்கள். வெகு விரைவில் மாட்டுவது உறுதி. அதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும். இதையெல்லாம் ஆதாரத்தோடு நாம் வெளியில் கொண்டுவர வேண்டும்.

### 20 பேர் கொண்ட ஒரு கும்பல்

இன்றைக்கு பெண்கள், குழந்தைகள் தனியாக வெளியே செல்ல முடியாத ஒரு சூழ்நிலை இந்த அரசால் உருவாகியிருக்கிறது. இவர்கள் என்ன சொல்லி ஆட்சிக்கு வந்தார்கள்? `போதைப்பொருளை ஒழிப்போம்' என்று சொன்னார்கள். இன்றைக்கு கோவையில் போதைப்பொருள் பற்றி தகவல் கொடுத்த கல்லூரி மாணவன், அவர் பெயர் அமுதன். அவனை காவல் துறையே காட்டிக் கொடுத்திருக்கிறது. காவல்துறை கூப்பிட்டுக் கேட்டிருக்கிறது. இந்தப் பையன் எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறான். யார் போதைப்பொருள் விற்கிறார்கள், யார் மூலமாக விநியோகம் நடக்கிறது என்று சொல்லியிருக்கிறான். காவல்துறை யாரைப் பற்றிச் சொன்னார்களோ, அந்தப் பையன் யாரைப் பற்றிச் சொன்னானோ அவர்களைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லிவிட்டார்கள்.

இதை சட்டமன்றத்தில் பேச ஆரம்பித்த உடனே கல்வித் துறை அமைச்சர் பதில் சொல்கிறார். கோஷ்டிப் பூசல், 10 பேருக்கும் 10 பேருக்கும் தகராறு நடந்தால், அதற்குப் பெயர் கோஷ்டிப் பூசல். 10 பேர் சேர்ந்து ஒரு பையனை அடித்தால் அதற்குப் பெயர் கொலை. அதற்குப் பெயர் கோஷ்டிப் பூசலா? 10 பேர் இல்லை, 20 பேர் கொண்ட ஒரு கும்பல் அந்தப் பையனை அடித்துக் கொன்றிருக்கிறார்கள்.

இன்றைக்கு உயிரை இழந்த அந்தப் பையனுடைய அம்மா யார் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்? திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது, நம் தலைவர் மீது நம்பிக்கை வைத்து, திராவிட முன்னேற்றக் கழகம் இதற்கு நீதி வாங்கித் தர வேண்டும், என் பையனுடைய மரணத்துக்கு தி.மு.க, நம் தலைவர் நீதி வாங்கித் தர வேண்டும் என்று, அந்த அம்மா பேசிக்கொண்டிருக்கிறார்கள். அமுதன் மரணத்துக்கு நீதி கிடைக்க, நிச்சயம் திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிப்பாகத் துணை நிற்கும்.

சட்டமன்றத்தில் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம், நீதிமன்றத்தில் நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். வழக்கறிஞர் அணியின் பங்களிப்பு மிக மிக முக்கியம். உங்கள் பகுதியில் நம் கழகத்தைச் சேர்ந்த யார் மீதாவது இந்த அரசு பொய் வழக்குப் போட்டால் அவர்களுக்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, GENZ இளைஞர்கள். இந்த GENZ இளைஞர்களைப் பார்த்து இந்த அரசு பயப்படுகிறது. அதனால்தான் அவர்களைக் குறி வைத்து, குறி வைத்துத் தூக்குகிறார்கள். கடந்த 100 நாட்களாகவே பொதுமக்கள், நம் கழகத் தோழர்கள், நிர்வாகிகள், ஒவ்வொரு அணியைச் சேர்ந்தவர்களும் தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் குறைந்தது 300 பேரைச் சந்திக்கிறேன். காலையானாலும் சரி, மாலையானாலும் சரி. அதில் அதிகமாக வருவது யார் பார்த்தீர்கள் என்றால், இந்த GENZ கூட்டம், GENZ இளைஞர்கள் அதிகமாக வருகிறார்கள்.

### அழைத்து வந்திருக்கிறோம்

GENZ இளைஞர்கள் எத்தனை பேர் வருகின்றார்களோ, அதே மாதிரி அடுத்த நாள் GENZ இளைஞர்களை உள்ளே தள்ளிவிட்டார்கள், பொய் வழக்கு போட்டுவிட்டார்கள், நாங்கள்தான் அவர்களைக் காப்பாற்றி அழைத்து வந்திருக்கிறோம் என்று வழக்கறிஞர் அணியும் கூட அழைத்து வருகிறார்கள். அதைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. அவர்களுக்கு நாம் முழுமையாக ஆதரவு அளிக்க வேண்டும்.

GENZ இளைஞர்கள் இன்றைக்கு கொள்கை பேச ஆரம்பித்திருக்கின்றார்கள். அதுதான் இன்றைக்கு இந்த ஆட்சியாளர்களைப் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றது. இந்த GENZ உடன்பிறப்புகள் வயதில் சிறியவர்கள். அவர்களைக் கைது செய்தால், அவர்களும், அவர்கள் குடும்பமும் பயந்துவிடுவார்கள் என்று இந்த ஆட்சியாளர்கள் கருதுகிறார்கள். எனவே அவர்களுக்கு நாம் உறுதுணையாக இருக்க வேண்டும். களத்திலும் சமூக வலைதளத்திலும் கழகத்துக்கு ஆதரவாகப் பேசுகின்ற GENZ இளைஞர்களுக்கான பாதுகாப்பு அரணாக, நம் கழக வழக்கறிஞர் அணி செயல்பட வேண்டும் என்று, உங்களையெல்லாம் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

நிறைய இளம் வழக்கறிஞர்கள் என்னைச் சந்திக்க வருகிறார்கள். கழகத்தின் மீது மிகுந்த ஆர்வத்தோடு வருகிறார்கள். கலைஞரின் சாதனைகள், நம் தலைவர் செய்த திட்டங்கள் எல்லாம் கேள்விப்பட்டு இப்போதுதான் வருகிறார்கள். அவர்களை எல்லாம் கண்டறிந்து, அவர்களுக்கான இடத்தைக் கொடுத்து, அவர்களை ஊக்கப்படுத்தி, அரவணைத்து நீங்கள் அழைத்துச் செல்ல வேண்டும் என்று நான் உங்களை எல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களை எல்லாம் வழக்கறிஞர் அணியில் சேருங்கள், கழகத்தில் உறுப்பினராகச் சேருங்கள். பொறுப்புகளைக் கொடுங்கள். அவர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்குங்கள், வழிகாட்டுங்கள். அது இன்றைக்கு மட்டும் இல்லை, எதிர்காலத்துக்கும் நம் கழகத்துக்கும் மிகப்பெரிய ஒரு வலிமையாக நிச்சயமாக அது மாறும்.

இறுதியாக ஒரே ஒரு விஷயம். உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய ஆளுங்கட்சிக்காரர்கள் குற்றச்செயல்களில் ஈடுபட்டால், நீங்கள் அதைச் சும்மா விடக்கூடாது. நீதிமன்றம் மூலமாக அவர்களுக்கு தண்டனை வாங்கித் தரும் வரை, அந்த வழக்கை நீங்கள் தொடர்ந்து பின்தொடர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

### சிறப்பாகச் செயல்பட வேண்டும்

இங்கே அண்ணன் என்.ஆர்.இளங்கோ அவர்கள் உங்களுக்குக் கிட்டத்தட்ட ஒரு வகுப்பு எடுத்திருக்கிறார். என்னென்ன செய்ய வேண்டும், அடுத்த செயல்திட்டம் (பிளான் ஆஃப் ஆக்சன்) என்ன என்பதைச் சிறப்பான முறையில் சொல்லியிருக்கிறார். அதை நீங்கள் பின்தொடர வேண்டும். அதிகாரம் இருக்கின்ற திமிரில் ஆளுங்கட்சிக்காரர்கள் மக்களுக்கு இன்றைக்கு மிகப்பெரிய ஒரு அச்சுறுத்தலாக மாறியிருக்கிறார்கள். மக்களுக்கு ஒரு பாதுகாப்பு அரணாக நம் தி.மு.க வழக்கறிஞர் அணி, சட்டத்துறை நிச்சயமாகச் செயல்பட வேண்டும். இதை இங்கு வந்திருக்கக்கூடிய நீங்கள் உறுதி செய்ய வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

ஒற்றுமையோடு நாம் அத்தனை பேரும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த மக்கள் விரோத அரசை வீட்டிற்கு அனுப்பும் வரை, மீண்டும் நம் தலைவர் முதலமைச்சராக அந்த நாற்காலியில் உட்காரும் வரை, அத்தனை அணிகளும் களத்தில் இறங்கிச் செயல்பட வேண்டும். அதில் முதன்மையான அணியாக சட்டத்துறை சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்காகத் திராவிட முன்னேற்றக் கழகமும், நம் தலைவர் அவர்களும் நிச்சயம் பக்கபலமாக இருப்பார்கள். நான் என்றைக்குமே உங்களோடு தோளோடு தோளாக உறுதுணையாக இருப்பேன். எனவே, உங்களின் பணிகள் அத்தனையும் மேலும் மேலும் சிறக்கட்டும் என்று சொல்லி, இந்தச் சிறப்பான வாய்ப்பளித்த சட்டத்துறைக்கு மீண்டும் என்னுடைய நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப் பேரவை எதிர்க்கட்சி தலைவருமான மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மூத்த வழக்கறிஞர்கள் சண்முகசுந்தரம், விடுதலை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வில்சன், கிரிராஜன், சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, கழகத்தின் துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் சேகர்பாபு, மாதவரம் சுதர்சனம், ஆவடி நாசர், சந்திரன், சிற்றரசு, சட்டத் துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ்.ரவிச்சந்திரன், ராதாகிருஷ்ணன், அருள்மொழி, தாமரைச்செல்வன், பச்சையப்பன், சூர்யா வெற்றிகொண்டான், துணைச் செயலாளர்கள் மருது கணேஷ், சந்துரு, ரகு, டாக்டர் சந்திரபோஸ், ராஜா முகமது, தலைமைக் கழக வழக்கறிஞர்கள் கே.ஜெ.சரவணன், கவி கணேசன், மறைமலை, தினேஷ்குமார், மீஞ்சூர் சுரேஷ், கழக சட்டத் திட்டத் திருத்தக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் சரவணன், கழக அரசின் முன்னாள் முதன்மைக் கூடுதல் வழக்கறிஞர்கள் குமரேசன், ரவீந்திரன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.

## சமூக வலைதளத்திலும் களத்திலும் கழகத்துக்கு ஆதரவாகப் பேசுகின்ற GENZ இளைஞர்களுக்கு பாதுகாப்பு அரணாகத் திகழ வேண்டும்!